**பள்ளிக்கல்வித்துறை – விழுப்புரம் மாவட்டம் – பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 3.00 மணி** **காலாண்டுத்தேர்வு (2023-24)** **மதிப்பெண்கள் 100**

**பகுதி – I (மதிப்பெண்கள் - 15)**

**குறிப்புகள்: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **15×1=15**

**2. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1 அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

2 ஆ) மோனை, எதுகை

3. ஈ) சருகும் சண்டும்

4. ஈ) சிற்றூர்

5. அ) வேற்றுமை உருபு

6. ஈ) இலா

7. ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

8. ஈ) அங்கு வறுமை இல்லாததால்

9. இ) குறிஞ்சி , மருதம் , நெய்தல் நிலங்கள்

10. ஆ) சினம்

11. இ) சொல்லிசை அளபெடை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13,14,15) விடை தருக.**

12. ஆ) குலசேகராழ்வார்

13. அ) பெருமாள் திருமொழி

14. ஆ) எதிர்மறைப் பெயரெச்சம்

15. ஈ) விளையாட்டு

**பகுதி – II (மதிப்பெண்கள் - 18) பிரிவு -1**

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.**

**வினா எண் 21 –க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16.

- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

17. (அ) உலகிலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

(ஆ) உலகம் என்பது ஐம்பூதங்களால் ஆனது என்றவர் யார்?

**(பொருத்தமான வினாக்கள் அமைத்திருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்)**

18. **இடம்** : அன்னை மொழியே (கனிச்சாறு தொகுதி -1 )

**ஆசிரியர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**விளக்கம்** : வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

19.

- 'சதம்' என்றால் நூறு என்று பொருள்.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண் அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம் ஆகும்.

20. ELA - Electronic Live Assistant

21. பண்என்னாம் பாடற்கி யையின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்

பிரிவு -2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** 5×2=10

22.

- தண்ணீர் குடி – தண்ணீரைக்குடி – இரண்டாம் வேற்றுமைத் தொகை – நோயற்ற வாழ்வு வாழ மிகுதியான தண்ணீரைக் குடி.
- தயிர்க்குடம் – தயிரை உடைய குடம்- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை – என் வீட்டில் தயிரை உடைய குடத்தைப் பார்த்தேன்.

23. விடை எட்டு வகைப்படும்.
அவை, சுட்டு, மறை, நேர், ஏவல், வினா எதிர் வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பனவாகும்.

24. தணிந்தது - தணி+த்(ந்)+த்+அ+து

| | |
|---|---|
| தணி | - பகுதி |
| த் | - சந்தி |
| த்(ந்) | - த், ந் -ஆக விகாரப்பட்டது. |
| த் | - இறந்தகால இடைநிலை |
| அ | - சாரியை |
| து | - படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதி |

25. அ) எட்டு(8) - அ
ஆ) நான்கு (4) - ச, இரண்டு (2) - உ

26. அ) தான் – தாம் – கண்ணன், தான் செய்ததாகத் தாமே ஒப்புக்கொண்டான்
ஆ) வளி – வாளி – வளியை வாளியில் அடக்க முடியாது.
**(ஏற்புடைய விடைகள் இருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்)**

27. கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கிய**தால்** கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (அல்லது)
கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கிய**வுடன்** கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.(அல்லது)
கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கிய**தும்** கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

28. அ) காப்பிய இலக்கியம் ஆ) விண்வெளித் தொழில்நுட்பம்

**பகுதி – III ( மதிப்பெண்கள் - 18) பிரிவு - 1**

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2×3=6

29. அ) தப்பட்டை, தப்பு
ஆ) வட்ட வடிவம்
இ) தப்பு **(பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**

30.

- வாகனங்களை இயக்குவதற்கும் நிறுத்துவதற்கும் தானியங்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம். இதுவே சுருக்கமான வழி என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறது.
- நமது திறன் பேசியோ, கணினியோ நாம் சொல்லச் சொல்லத் தன் அகண்ட தரவுகளில் உள்ள கோடிக்கணக்கான சொற்களுடன் ஒப்பிட்டுச் சரியான சொல்லைக் கண்டுபிடிக்கிறது.
- விடுதிகளில், வங்கிகளில் அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவையை ரோபோக்கள் அளிக்கின்றன.
- மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று நினைக்கும் செயல்களையும் கூடசெய்து விடுகின்றன.
- எனவே, இக்கண்டுபிடிப்புகள் அனைத்தும் மனிதனை மேம்படுத்துவதாகவே அமைகின்றன.

**(ஏற்புடைய விடைகள் இருப்பின் மதிப்பெண்கள்வழங்கலாம்.)**

31.

- உயிரிங்களின் உணவு நான் – (தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு உணவாக அமைவதால்)
- இயற்கை அமைப்பிற்கு அடிப்படை நான் (நிலத் தோற்றம்)
- ஆற்றலாக நான் (நீர் மின்சாரம் )
- என் இருப்பிடத்தைக் கொண்டு எனக்கு பல பெயர்கள் ( கடல், ஆறு, ஏரி, குளம், கேணி, குட்டை முதலியன)
- என் நகர்வைக் கொண்டு எனக்குப் பல பெயர்கள் ( அருவி, நதி, ஆறு)

**(ஏற்புடைய விடைகள் இருப்பின் மதிப்பெண்கள்வழங்கலாம்.)**

## பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **2×3=6**

32.

- திருவடியில்கிண்கிணிகளோடு சிலம்பும் ஆடட்டும்!
- இடையில்அரைஞாண் மணியோடு அரைவடங்கள்ஆடட்டும்!
- பசும்பொன் என ஒளிரும் தொந்தியில்சிறுவயிறு சரிந்தாடட்டும்!
- நெற்றியில் பொட்டுடன் சுட்டியும் பதிந்தாடட்டும்!
- காதில் குழையுடன் குண்டலங்களும் அசைந்தாடட்டும்!
- கொண்டையும் சுற்றப்பட்ட ஒளிர்முத்துதோடு ஆடட்டும்!

33.

- நாம் எந்த ஒரு செயலைச் செய்ய முற்பட்டாலும் அச்செயலுக்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், அதன் தன்மை, அதைச் செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து செய்யவேண்டும்.
- மனவலிமை, மனிதக்குலத்தைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே சிறந்தோர் ஆவார்.
- இயற்கையான நுண்ணறிவும் நூலறிவும் உடையோர்க்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகளும் நிற்காது.

- ❖ ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

34. **முல்லைப்பாட்டு**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர் "என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

- நப்பூதனார்.

**பிரிவு - 3**

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2×3=6

35.

| **வினைமுற்று** | **தொழிற்பெயர்** |
|---|---|
| அறிந்தது | அறிதல் |
| அறியாதது | அறியாமை |
| புரிந்தது | புரிதல் |
| புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் |
| தெரியாதது | தெரியாமை |
| பிறந்தது | பிறத்தல் |
| பிறவாதது | பிறவாமை. |

36. **அணி வகை - உவமை அணி**

**விளக்கம்**

உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, உவம உருபு வெளிப்படையாக நின்று ஒப்புமைத் தோன்ற வருவது உவமையணி ஆகும்.

**சான்று**

வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு.

**உவமை** - வேலொடு நின்றான் இடுஎன்றது
**உவமேயம்** - கோலொடு நின்றான் இரவு
**உவம உருபு** - போலும்

**பொருத்தம்**

இக்குறளில் உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, உவம உருபு வெளிப்படையாக நின்று ஒப்புமைத் தோன்ற வருவதால் இதில் உவமையணி பயின்று வந்துள்ளது.

37. **பயின்று வரும் பொருள்கோள்:** ஆற்றுநீர் பொருள்கோள்

**விளக்கம்:** செய்யுள், தொடக்கம் முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராக நின்று பொருள் கொள்ளுமாறு அமைவது 'ஆற்றுநீர்ப் பொருள்கோள்'

எனப்படும்.

**சான்று** : "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

**பொருள்**: குறளில் வந்த எந்த ஒரு சொல்லும் முன்பின் மாறாமல் பொருள் கொள்வதால் இது ஆற்றுநீர்பொருள்கோள் எனப்பட்டது.

**பகுதி – IV ( மதிப்பெண்கள் - 25)**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **5×5=25**

38. (அ)

- பாண்டிய நாட்டை ஆண்ட குசேல பாண்டியன், கல்வியறிவுமிக்கவன் ' எனக்கற்றோர்கூறக்கேட்ட இடைக்காடனார், சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க தம் கவிதையை அப்பாண்டியன் முன் பாடிக்காட்டினார்.
- மன்னன், சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலவரை அவமதித்தான்.
- இடைக்காடனார், திருஆலவாயில் உறையும் இறைவன் முன் சென்று வணங்கி, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையைஅணிந்த பாண்டியன் முன்,சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவன் சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் என் புலமையை அவமதித்தான்.
- அவன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவமாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான் எனச் சினத்தோடு கூறினார்.
- இவ்வாறு உரைத்த இடைக்காடனார் கூற்றிற்குச் செவிசாய்த்து, இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்த இறைவன், தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியுடன் வையை ஆற்றின் தெற்கே ஒரு திருக்கோயிலை உருவாக்கி அங்குச் சென்று தங்கினார்.
- இதனை அறிந்த மன்னன் யான் என்ன குற்றம் செய்தேன்? ஏன் இங்கு எழுந்தருளினீர் எனக் கேட்டு வருந்தினான்.
- இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றத்தைத் தவிர, வேறு எந்த குற்றமும் இல்லை என்றார்.
- தன் தவற்றை உணர்ந்த பாண்டிய மன்னன், இடைக்காடனாருக்கு மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்திச் சிறப்புச் செய்தான் **(அல்லது)**

(ஆ)

**கார்கால மழை**

கார்காலம் தொடங்கிவிட்டது. கடல் நீரை முகந்துகொண்டு மழைமேகமானது திருமாலின் நிறம் கொண்டு, மாவலி மன்னன்முன் விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் பேருருவம் கொண்டதுபோல் வளமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, பெருமழை பொழிந்தது.

**நற்சொல் கேட்டு நிற்றல்**

மாலைப் பொழுதில் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரத்தைப் போக்கக் கருதிய முதுப்பெண்கள், ஊரின் புறத்தே சென்று முல்லைப் பூவுடன் நெல்லையும் சேர்த்து தூவி, தெய்வத்தைத் தொழுதனர். தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

**இன்னே வருகுவர் தாயர்**

அப்போது யாரோ ஒரு ஆயமகள், சிறுதாம்பு கயிற்றால் கட்டப்பட்ட, பசியால் வாடிய கன்றின் வருத்தத்தைப் போக்க நினைத்து அதனிடம் , "மிகுதியாகப் புல்லை மேய்ந்த உன் தாய், வளைந்த கத்தியை கையில் உடைய இடையர் ஓட்டி வர, இப்போது வந்துவிடுவாள். வருந்தாதே! " என்று கூறினாள்.

**தலைவியை ஆற்றுப்படுத்துதல்**

அதனை நற்சொல் எனக் கொண்ட முதுப்பெண்கள் தலைவியிடம் சென்று, நற்சொல்லைக் கேட்டோம். அதனால் தலைவர் திரும்பி வருவது உறுதி. எனவே, உன் துயரத்தை விட்டுவிடுவாயாக என்று ஆற்றுப்படுத்தினாள்.

39.

(அ1. தலைப்பு - ½ மதிப்பெண்
2. விளித்தொடர் - ½ மதிப்பெண்
3. பொருள் - 3 மதிப்பெண்கள்
4. இப்படிக்கு, இடம்மற்றும் நாள் - ½ மதிப்பெண்
5. உறைமேல் முகவரி - ½ மதிப்பெண்

**(அல்லது)**

(ஆ) 1. தலைப்பு - ½ மதிப்பெண்
2. விடுநர், பெறுநர் - ½ மதிப்பெண்
3. விளித்தல் - ½ மதிப்பெண்
4. பொருள் - ½ மதிப்பெண்
5. செய்திப்பகுதி - 2 மதிப்பெண்கள்
6. இடம் மற்றும் நாள் - ½ மதிப்பெண்
7. உறைமேல் முகவரி - ½ மதிப்பெண்

40.

**<u>மூழ்குகிறது மனித நேயம்</u>**

**தண்ணீர் நிறைந்த குளம்**
**தவித்தபடி வெளிநீட்டும் கை**
**கரையில் கைபேசி படமெடுத்தபடி**
அழிக்கத்துடிக்கும் காலன் கையில்,
சுயநலக் கலாச்சாரம் பையில்
நீருக்குள் மனித உயிரும்
வெளியில் மனித நேயமும்
ஒட்டுமொத்தமாய் மூழ்குகிறது.
எரிகின்ற வீட்டிலும்
பொருளினைத் தேபடுவராய்:
இழவு வீட்டு வாசலில்
பிரியாணி உண்பவர்களாய்;
பசியுடன் தவிக்கும் குழந்தையின் முன்னே
பலகாரம் தின்வர்களாய்;
இடிபாட்டில் மாட்டிக்கொண்டவரின்

நகையினை அவிழ்ப்பவர்களாய்

மனிதமற்ற மனிதர்கள்

இம்மண்ணில் சமீபகாலமாய்!

மூழ்குகிறது

மனிதனுடன் மனித நேயமும்!

**(ஏற்புடைய கவிதை இருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்)**

41. (விடை கடைசி பக்கத்தில் உள்ளது)

42. (அ) **(ஏற்புடைய ஐந்து தொடர்கள் எழுதியிருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்)** **(அல்லது)**

(ஆ) **இயற்கையுடன் விடியல்**

பொன்னிற சூரியன் அதிகாலையில் தோன்றிய பிரகாசமான கதிர்களைக் கொண்டு உலகை இருளைப் போக்குகிறது. மேகங்கள் அளையத் தொடங்குகின்றன. வண்ணமயமான பறவைகள் தங்கள் காலை இசையால் மகிழ்ச்சி அடைகின்றன. அழகிய பட்டாம்பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனம் ஆடுகின்றன. மலர்களின் வாசனை, தென்றல் காற்றை நிரப்புகிறது. காற்று எல்லா இடங்களிலும் வீசி மகிழ்ச்சியூட்டுகிறது.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3×8=24

43. (அ) (பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்.) **(அல்லது)**

(ஆ) (பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்.)

44. (அ)

**கோபல்லபுரத்து மக்கள்** – கி.இராஜ நாராயணன்.

| **பொருளடக்கம்** |
|---|
| **முன்னுரை** |
| **கதைமாந்தர்கள்** |
| **குடித்தண்ணீர் கிடைக்குமா?** |
| **வரட்டும்! வரட்டும்!** |
| **வயிறு நிறைந்த குழந்தையைப் போல** |
| **பெயர்ப்பொருத்தம்** |
| **முடிவுரை** |

**முன்னுரை**

கி. இராஜநாராயணன் எழுதிய, கரிசல் பூமி மக்களின் விருந்தோம்பல் பண்பை விளக்கும் கதையாகிய 'கோபல்லபுரத்து மக்கள்' என்னும் கதையில் வரும், அன்னமய்யா என்பவரின் பண்புநலன் பற்றியும் பெயர்ப் பொருத்தப்பாட்டினைப் பற்றியும் விரிவாகக் காண்போம்!

**கதைமாந்தர்கள்**

- அன்னமய்யா
- சுப்பையா
- இளைஞன்

**குடித்தண்ணீர் கிடைக்குமா?**

சுப்பையாவின் புஞ்சை நிலத்தில் மக்கள் களையெடுத்துவிட்டு, காலைக் கஞ்சியைக் குடிக்க உட்கார்ந்தார்கள். சுப்பையாவின் நிலத்திற்கு அருகில் உள்ள அன்னமய்யாவும்

சாலையோரமுள்ள தன் வயலில் அருகம்புல் களையினை எடுத்துக்கொண்டிருந்தான். அப்போது பசியால் வாடி, நடக்கமுடியாமல் தள்ளாடியபடி வாலிபன் ஒருவன் வந்து மரத்தடியில் மயங்கிய நிலையில் அமர்ந்தான். அதனைப் பார்த்த அன்னமையா அவன் அருகில் சென்றான். அவன் அன்னமய்யாவை பார்த்து,"தம்பி, கொஞ்சம் குடிக்க தண்ணீர் கிடைக்குமா?" எனக் கேட்டான். அதற்கு அன்னமய்யா, "நீச்சுத் தண்ணீர் வாங்கி வரவா?" எனக் கேட்டான். அந்த வாலிபன் நாமே அங்குப் போய்விடலாம் என்பதுபோல் பார்த்தான். இருவரும் நடந்து சென்றனர்.

**வரட்டும்! வரட்டும்!**

தொலைவில் அன்னமய்யாவுடன் ஒருவன் வருவதைப் பார்த்து, "அன்னமய்யா யாரோ ஒரு சாமியாரை இழுத்துகிட்டு வரான்" எனச் சுப்பையா கூறினான். இதைக் கேட்ட களையெடுப்போர்களில் ஒருவர், "வரட்டும் வரட்டும் ஒரு வயித்துக்குக் கஞ்சி ஊத்தி நாமும் குடிப்போம்" என்று கூறினார்.

**வயிறு நிறைந்த குழந்தையைப் போல**

அன்னமய்யா கலசத்திலிருந்த கஞ்சியின் நீத்துபாகத்தைச் சிரட்டையில் ஊற்றிக் கொடுத்தான். கஞ்சியைக் குடித்த வாலிபன், வேப்பமர நிழலைச் சொர்கமாய் நினைத்து அப்படியே படுத்துத் தூங்கிவிட்டான். இதைக் கண்ட அன்னமய்யாவுக்கு மனநிறைவு ஏற்பட்டது. மார்பில் பால்குடித்துக்கொண்டே இருக்கும்போதே வயிறு நிறைந்து அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் போலவே தூங்கும் அவ்வாலிபனைப் பார்த்துக்கொண்டே இருந்தான் அன்னமய்யா.

**பெயர்ப்பொருத்தம்**

தூக்கம் தெளிந்து எழுந்த வாலிபன், "உன் பெயர் என்ன?" என்று அன்னமய்யாவிடம் கேட்டான். அதற்கு அவன் "அன்னமய்யா" என்றான். "எனக்கு இன்று நீ இடும் அன்னம்தான் என் வாழ்வுக்கு மீண்டும் உயிர்கொடுத்தது" என்று மனதுக்குள் கூறினான் அந்த வாலிபன்.

**முடிவுரை**

வந்தவரை விருந்தினராய் எண்ணி, அருகிலிருந்து உணவளித்து மகிழ்ந்த அன்னமய்யாவின் குணம் நம்மிடம் உருவாக வேண்டும். **(அல்லது)**

(ஆ)**புதிய நம்பிக்கை**

| பொருளடக்கம் |
|---|
| முன்னுரை |
| கதைமாந்தர்கள் |
| பருத்திக்காட்டில் மேரி |
| மேரியின் மனவருத்தம் |
| புதிய நம்பிக்கை |
| முடிவுரை |

**முன்னுரை**:

பருத்திக்காட்டில் வேலைசெய்யும் கருப்பர் இனத்தவராகிய பாட்ஸி, சாம் இணையர் படிப்பறிவற்றவர்கள் ஆவார்கள். இவர்களின் குடும்பத்தில் முதல் கல்வியறிவு பெற்றவர் இளைய மகள் மேரியே ஆவாள். மேரி கல்வி கற்பதற்கான சூழல் ஏற்பட்ட நிகழ்வை இக்கதையில் காணலாம்.

**கதைமாந்தர்கள்**

சிறுமி மேரி, பாட்ஸி, சாம், மிஸ் வில்சன், வெள்ளையர் இனக்குழந்தை, கிராமமக்கள்

**பருத்திக்காட்டில் மேரி:**

பருத்திக் காட்டில் தன் பதினொரு வயதுவரை பருத்திப் பயிரிடும் பருவம், பருத்திச் செடி வளரும் விதம், அறுவடைக் காலம் முதலியவற்றை மட்டுமே அறிந்து வளர்ந்தவள் மேரி. செடி வளர்ப்பதில் கவனத்தோடு இருக்கும் மேரி, அவ்வப்போது தன் குடும்பத்துடனும் மகிழ்ச்சியாக இருப்பாள்.

**மேரியின் மனவருத்தம்:**

ஒருநாள் தன் அம்மாவுடன் வெள்ளையர்கள் வசிக்கும் வீட்டிற்குச் சென்றிருந்தாள். அங்குள்ள குழந்தைகள் அவளை விளையாட அழைத்தனர். அவள், அவர்கள் வசிக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருள்களையும் தொட்டுப்பார்த்து மனம் மகிழ்ந்தாள். அவள் அதே முனைப்புடன் அருகிலிருந்த ஒரு புத்தகத்தைத் தொட்டபோது ஒரு குழந்தை, நீ அதை எடுக்கக்கூடாது; உன்னால் படிக்க முடியாது என்று கூறி, அப்புத்தகத்தைத் தட்டிவிட்டாள்.

**புதிய நம்பிக்கை**

முதல் முறையாகத் தன் படிப்பு பற்றி, தன் பெற்றோரிடம் பேசிய மேரி, அது கிடைப்பது அரிது என்று உணர்ந்தபோது மிகவும் மனவருத்தமுற்றாள். இருப்பினும் வெள்ளைக் குழந்தைக் கூறிய அச்சொற்களால் தன் இயல்பான செயல்பாடுகளைச் செய்யாமல் வருத்தத்தோடு இருந்தாள். ஒருநாள் மிஸ் வில்சன் என்ற ஆசிரியர் ஒருவர் பருத்திக்காட்டுக்கு வந்து மேரியைப் பள்ளிக்கு வரச்சொல்லி அழைத்தபோது மிகவும் மன மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் சென்று தன் படிப்பைக் கவனத்துடன் படித்து முடித்தாள். மீண்டும் மிஸ் வில்சன் உதவியுடன் மேற்படிப்பு படிக்க வாய்ப்பு கிடைத்தபோது அந்த ஊரே அவளை இரயில் நிலையம் வரைச் சென்று வழிஅனுப்பிவைத்தது.

**முடிவுரை**

தனக்கு படிப்பு கிடைக்காததன் பின்னணியை உணர்ந்த மேரி, தன்னைப்போன்ற கருப்பர் இனத்து குழந்தைகள் படிப்பதற்காக ஒரு பள்ளியைக் கட்டி, அவர்களுக்கு புதிய நம்பிக்கையை உருவாக்கினாள்.

45. **அ மற்றும் ஆ**

1. தலைப்பு கொடுத்தல் - 1 மதிப்பெண்
2. முன்னுரை, முடிவுரை அமைத்தல் - 1 மதிப்பெண்
3. தலைப்புக்கேற்ற செய்திகளை எழுதுதல் (பொருளுரை மற்றும் உள்தலைப்புகள்) - 4 மதிப்பெண்கள்
4. மேற்கோள்கள், பழமொழிகள், திருக்குறள்கள் முதலியவற்றை பயன்படுத்துல் - 1 மதிப்பெண்
5. நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துதல் - 1 மதிப்பெண்

- முதலியவற்றைப்பார்த்து மதிப்பெண்கள் வழங்கவேண்டும். ஒற்றுப்பிழை, எழுத்துப்பிழை, கையெழுத்து முதலியவற்றையும் பார்க்க வேண்டும்.

# நூலக உறுப்பினர் படிவம்

விழுப்புரம் ____________ மாவட்ட நூலக ஆணைக்குழு

~~மைய / கிளை~~ / ஊர்ப்புற நூலகம் குன்னம்

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்: ----------- உறுப்பினர் எண்: ------------

1. பெயர் : குழலி
2. தந்தை பெயர் : பூங்குன்றன்
3. பிறந்த தேதி : 16-10- 2009
4. வயது : 14
5. படிப்பு : பத்தாம் வகுப்பு
6. தொலைப்பேசி எண் : 9965330044
7. அஞ்சல் முகவரி : 16, பாரதிதாசன் தெரு, குன்னம், வானூர் வட்டம்,
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) விழுப்புரம் மாவட்டம்-604304.

நான் குன்னம் நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 200 சந்தா தொகை ரூ 300 ஆக மொத்தம் ரூ 500 ரொக்கமாகச் செலுத்துகிறேன்.

நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: குன்னம் தங்கள் உண்மையுள்ள

நாள் : 30.08.2023 பூங்கொடி

திரு/ திருமதி/ செல்வி/ செல்வன் ------------------------------------------ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

www.Padasalai.Net